[2006 ஆகஸ்ட் 1

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

8. குறிப்பிடப்பட்ட சில வேளாண் விளைபொருட்களின் விற்பனைக்காக நீலகிரி மாவட்டத்தினை அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவித்தும், "நீலகிரி அங்காடிக் குழு" என ஒரு அங்காடிக் குழு அமைத்தும், விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பகுதிகளை முறையே உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி மற்றும் கூடலூர் விற்பனைக் கூடங்களின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளாக அறிவித்தும், வேளாண்மைத் துறையின் 9–1–2006 ஆம் நாளிட்ட 10 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(C) *பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

9. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

18. மானியக் கோரிக்கை எண் 14–தமிழ்நாடு மின்சார வாரியம், மின்சார ஆய்வுத் துறை, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் பற்றிய கொள்கை விளக்க குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

19. எரிசக்தித் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2006. (தமிழ், ஆங்கிலம்)

20. மானியக் கோரிக்கை எண் 44 – சிறுதொழில்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

21. சிறுதொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)